12.02.2024

அ.வ.எண். 128-2018

வா.சா.1 - ராமசாமி

1, 2ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

எனக்கு 70 வயது ஆகிறது. நான் 5ம் வகுப்பு வரை படித்துள்ளேன். என்னுடைய வழக்கறிஞருக்கு வழக்கு தாக்கல் செய்ய சங்கதிகள் நான் தான் சொன்னேன். நான் வழக்கிலும், என்னுடைய முதல் விசாரணையிலும் நான் சொல்லியுள்ளது ஒரே மாதிரியான சங்கதிகள் தான் அவை சரியானவை. இந்த வழக்கு ஆவணங்களை நான் படித்து பார்க்கவில்லை. நான் 3 பத்திரங்களின் அடிப்படையில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்கு சொத்துக்களை நான் கிரயம் வாங்கும்போது அளந்து தான் கிரயம் வாங்கினேன். எனக்கு கிரயம் கொடுத்த நடராஜன் வகையறாவின் அப்பா பெயர் நஞ்சப்பா கவுண்டர். மேற்படி நஞ்சப்ப கவுண்டர் அவரும், அவரது சகோதரரும் 17.08.1959 ல் வழக்கு சொத்து மற்றும் அவர்களது குடும்ப சொத்துக்களை பாகப்பிரிவினை செய்து கொண்டார்கள் என்றால் ஆமாம்.

அவ்வாறு பாகம் செய்யும்பொழுது நஞ்சப்ப கவுண்டருக்கு பி.அட்டவணையாக 16 ஏக்கர் 60 சென்ட் ஒதுக்கப்பட்டது என்றால் ஆமாம். நஞ்சப்ப கவுண்டருக்கு க.ச.எண்.451 ல் 6.22 ஏக்கர் ஒதுக்கப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. 451 நம்பர் காலையில் பொது இடம், தடம், கிணறு ஆகியவற்றிற்காக பொதுவாக ஒதுக்கப்பட்ட 52 செண்ட்டில் பொதுவில் பாதி 26 சென்ட் ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் ஆமாம். அதேபோல் 452 நம்பர் காலையில் நஞ்சப்ப கவுண்டருக்கு 1.44 ஏக்கர் ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. அதேபோல் 452 ல் பொது இடம், கிணறு தடத்திற்காக மொத்தம் 36 சென்ட் ஒதுக்கப்பட்டு அதில் 18 சென்ட் பொதுவில் பாதி நஞ்சப்ப கவுண்டருக்கு ஒதுக்கப்பட்டது என்றால் எனக்கு தெரியாது.

கந்தசாமி கவுண்டருக்கு ஏ-அட்டவணை சொத்தாக மேற்படி பாகப்பிரிவினை பத்திரத்தில் புல எண். 451 ல் 3.61 ஏக்கர், 452/2A காலையில் 4.22 ஏக்கர் ஒதுக்கப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. அதேபோல் கந்தசாமி கவுண்டருக்கும் 451 ல் கிணறு பொது இடம், தடம் 26 சென்ட் ஒதுக்கப்பட்டது என்றால் ஆமாம். 452

நம்பர் காலையில் கிணறு, பொது இடம், தடத்திற்காக 18 சென்ட் ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. மேற்படி நஞ்சப்ப கவுண்டரும், கந்தசாமி கவுண்டரும் அவர்களுக்கு பாகப்பிரிவினை ஒதுக்கப்பட்ட சொத்துகளின் அடிப்படையில் தான் அனுபவம் செய்து வந்தார்கள் என்றால் ஆமாம். கருப்ப கவுண்டர், மாரப்ப கவுண்டர், பழனிக்கவுண்டர் ஆகியோர் கடந்த 08.03.1967 ம் தேதியில் நஞ்சப்ப கவுண்டரிடம் இருந்து புல எண்.451 ல் 2.56 ஏக்கரும், புல எண்.455 ல் 54 சென்ட்டும் மொத்தம் 3.10 ஏக்கர் கிரயம் பெற்றார் என்றால் ஆமாம்.

452 புல எண்ணில் உள்ள நஞ்சப்ப கவுண்டருக்கு பாத்தியப்பட்ட பொது இடம் 18 சென்ட் நிலத்தை அவரது சகோதரர் கந்தசாமிக்கு 30.06.1971 ல் கிரயம் செய்து கொடுத்தார் என்றால் எனக்கு தெரியாது. கந்தசாமி கவுண்டரும், அவரது மகன்களான அங்கப்ப கவுண்டர், கணேஷ கவுண்டருடம் கடந்த 20.11.1974 ல் பாகப்பிரிவினை படி வந்த சொத்துக்களை அவர்களுக்குள் பாகம் பிரித்து கொண்டனர் என்றால் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1 மற்றும் 2 ல் எங்களது கிரயம் முன்னோர்களான நடராஜன் வகையறாவிற்கு பாகப்பிரிவினையில் வந்த சொத்துக்களை தான் கிரயம் செய்து கொடுத்ததாக எழுதிக் கொடுத்துள்ளனர் என்றால் ஆமாம். 12.06.2002 ல் நான் கருப்ப கவுண்டரின் வகையறாவிடம் இருந்து கிரயம் பெறும்பொழுது அவர்களுக்கு 08.03.1967 ல் கிரய சாசனப்படி பாத்தியப்பட்ட சொத்துக்களை கிரயம் செய்ததாக குறிப்பிட்டுள்ளது என்றால் ஆமாம்.

நாங்கள் வா.சா.1 முதல் 3 ஆவணங்களின் கீழ் கிரயம் பெறும்பொழுது பத்திரப்படி அளந்து பார்த்து கிரயம் பெற்றேனா என்றால் ஆமாம். சாட்சி பத்திரப்படி, UDR, அனுபவப்படியும் அளவுகளை பார்த்து கிரயம் பெற்றோம் என சாட்சியம் அளிக்கிறார். அவ்வாறு அளந்து பார்ப்பதற்கு முன்பு நாங்கள் அறிவிப்பு எதுவும் கொடுத்தோமா என்றால் எனக்கு சொத்தை விற்பனை செய்தவர்கள் தான் அளந்து கொடுத்தார்கள். வழக்கு சொத்துக்களை கிரயம் பெறும்பொழுது வழக்கறிஞரிடம் ஆலோசனை பெற்று கிரயம் பெற்றேனா என்றால் இல்லை. நான் அவ்வாறு கிரயம் பெறும்பொழுது UDR பட்டாவை பார்த்துள்ளேன். மேற்படி UDR பட்டாவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் நினைவில்லை.

நான் புல எண்.447 ல் 7.09 ஏக்கர் நஞ்சப்ப கவுண்டர் வகையறாவிடம் இருந்து கிரயம் பெற்றுள்ளேன். அதற்கு UDR பட்டா 7.09 ஏக்கருக்கு உள்ளது. நான் கிரயம் பெறும்பொழுது பத்திரத்தில் உள்ள அளவுகளுக்கும் UDR ல் உள்ள அளவுகளுக்கும் வேறுபாடு இருந்ததா என்றால் நினைவில்லை. க.ச.எண்.452 ல் பொது தடம் தவிர பொது இடம், கிணறு ஆகியவற்றிற்கு ஒதுக்கப்பட்ட 36 சென்ட்டில் எனக்கு கிரயம் எதுவும் தரவில்லை. மேற்படி பொது இடம் 36 சென்ட்டிற்குள் எனக்கு எந்த அனுபவமும் இல்லை. மேற்படி பொது இடம் 36 சென்ட்டை பொருத்தும் எனது பெயரில் பட்டா இருந்தால் அது தவறு என்றால் ஆமாம். 452/2 நம்பர் காலையில் 9 சென்ட் தனியாக ஒதுக்கப்பட்டுள்ளது, அதில் நான் பொதுவில் 1/4 தான் கிரயம் பெற்றுள்ளேன், அது எந்த இடம் என்றால் அது தடம்.

1959 பாகப்பிரிவினை பத்திரத்தில் தடத்திற்காக 9 சென்ட் ஒதுக்கப்பட்டதாக எந்த குறிப்பும் இல்லை என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. அதேபோல் என்னுடைய கிரயப் பத்திரத்திலும் பொது தடத்திற்காக 9 சென்ட் ஒதுக்கப்பட்டதாவும், அதில் 1 ல் 4 பாகம் எனக்கு பாதைக்காக ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல, சொல்லப்பட்டுள்ளது. மேற்படி 9 சென்ட் எந்த ஆவணத்தின் அடிப்படையில் என்னுடைய கிரய முன்னோர்களுக்கு பாத்தியப்பட்டது என்பதை காட்ட பத்திரம் உள்ளதா என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. என்னுடைய கிரய முன்னவர்கள் அவர்களுக்கு 9 சென்ட் இடத்தில் பாத்தியம் உள்ளது என சொன்னதின் அடிப்படையில் நான் கிரயம் பெற்றேன் என்றால் சரிதான்.

பொதுத்தடத்திற்கு 9 சென்ட் இருந்ததாக என்னுடைய கிரய முன்னவர்கள் சொன்னது பொய் என்றும், அதன் அடிப்படையில் நான் கிரயம் பெற்றது செல்லாது என்றும், சொன்னால் சரியல்ல, அதை பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1 மற்றும் 2 ன் மூலமாக புல எண். 451 ல் பொது இடம், கிணற்றுக்காக விடப்பட்ட 52 சென்ட்டில் பொதுவில் 1/4 13 சென்ட்டில் கிரயம் செய்து கொடுத்துள்ளார்கள் என்றால் ஆமாம். அதேபோல் அவர்களுக்கு பாத்தியப்பட்ட மற்றொரு 13 சென்ட்டை 1967 ல் கருப்ப கவுண்டர் வகையறாவிற்கு கிரயம் செய்து கொடுத்துள்ளார் என்றால் சரிதான். கருப்ப கவுண்டர் வகையறாவிடம் இருந்து நான் பொது இடம் 13 சென்ட்டை கிரயம்

பெற்றுள்ளேன் என்றால் ஆமாம். நான் கிரயம் பெற்றது போக மீதமுள்ள 26 செண்ட் நிலத்தை நஞ்சப்ப கவுண்டர் சகோதரர் கந்தசாமி கவுண்டர் வாரிசுகளுக்கு பாத்தியப்பட்டு அவர்கள் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் ஆமாம்.

451/7 மற்றும் 8 உட்பிரிவில் பொது இடம் எவ்வளவு உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. மேற்படி 52 செண்ட் இடத்தை இதுனால் வரை நாங்களும் கந்தசாமி கவுண்டர் வாரிசுகளும் பொதுவாக பயன்படுத்தி வருகிறோம் என்றால் ஆமாம். 451/7 மற்றும் 8 உட்பிரிவில் மொத்தம் 39 செண்ட் நிலத்திற்கு உட்பிரிவு ஆகியுள்ளது என்றால் அது எனக்கு தெரியாது, அது தவறானது என்றால் எனக்கு தெரியாது. அந்த உட்பிரிவு தவறானது என்று எனக்கு தெரிந்தும் இந்த வழக்கிற்காக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. க.ச.எண்.451 ல் மொத்தம் எவ்வளவு விஸ்தீரணம் கிரயம் பெற்றேன் என்று எனக்கு தெரியாது. நான் 451 காலையில் நஞ்சப்ப கவுண்டருக்கு பாத்தியப்பட்ட மொத்த பூமிகளையும் கிரயம் பெற்று விட்டேனா என்றால் இல்லை, கொஞ்சம் நிலம் அவர்கள் வைத்துள்ளார்கள். எவ்வளவு விஸ்தீரணம் அவர்கள் வசம் உள்ளது என்று எனக்கு தெரியாது.

எனது பெயருக்கு 451 நம்பர் காலையில் எவ்வளவு விஸ்தீரணத்திற்கு பட்டா உள்ளது என்று எனக்கு நினைவில்லை. இந்த வழக்கு சொத்து சம்மந்தமாக ராஜமாணிக்கம் வழக்கறிஞர் எனக்கு அறிவிப்பு அனுப்பினாரா என்றால் எனக்கு நினைவில்லை.

மேலும் குறுக்குவிசாரணை தொடர்ச்சிக்கு வேறு ஒரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

Sd/ராமசாமி

Taken down by me to open court read over to the witness and acknowledged by her to be corrected

N RENUGA Digitally signed by N RENUGA Date: 2024.02.12 18:24:52 +0530

District Munsif
Sulur